**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**முன்னிலை : திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,**

**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனி 24-ம் நாள்**

**2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07-ம் நாள் செவ்வாய்கிழமை**

**அசல் வழக்கு எண்.196/2017**

**C.N.R.No.TNKI11-000495-2017**

G. சரஸ்வதி, க/பெ. கோவிந்தராஜ், த/பெ. கோவிந்தன், இந்து, வயது சுமார் 35, வசிக்குமிடம்: ஓலைப்பட்டி கிராமம், சாலமரத்துப்பட்டி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

..... வாதி

//எதிராக//

1. D. கோவிந்தன், த/பெ. துரைசாமி நாயுடு, இந்து, வயது சுமார் 62, வசிக்குமிடம்: குட்லானூர் கிராமம், மிட்டப்பள்ளி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

2. G. ரமேஷ், த/பெ. கோவிந்தன், இந்து, வயது சுமார் 40, வசிக்குமிடம்: குட்லானூர் கிராமம், மிட்டப்பள்ளி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

3. G. ஜானகி, க/பெ. தாமோதரன், த/பெ. கோவிந்தன், இந்து, வயது சுமார் 43, வசிக்குமிடம்: கொட்டுக்காரம்பட்டி கிராமம், மிட்டப்பள்ளி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

4. R. விமலா, க/பெ. ராஜாராமன் த/பெ. கோவிந்தன், இந்து, வயது சுமார் 37, வசிக்குமிடம்: குட்லானூர் கிராமம், மிட்டப்பள்ளி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

5. K. மாயக்கண்ணன், த/பெ. கிருஷ்ணன், இந்து, வயது சுமார் 40, வசிக்குமிடம்: குட்லானூர் கிராமம், மிட்டப்பள்ளி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

6. வெங்கடாசலம், த/பெ. கிருஷ்ணன், இந்து, வயது சுமார் 52, வசிக்குமிடம்: குட்லானூர் கிராமம், மிட்டப்பள்ளி அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

... பிரதிவாதிகள்

| | |
|---|---|
| வழக்கு தாக்கல் செய்த தேதி : 17.11.2017, 24.11.2017, 06.12.2017<br>வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்: 08.12.2017<br>வழக்கு மூலம் : 07.04.2014, 29.06.2017, 08.07.2017 | வழக்கின் மொத்த மதிப்பு : ரூ.35,81,300/–<br>வாதிக்குரிய 1/5 பங்கிற்காக தாவா சொத்தின் மதிப்பு : ரூ.7,16,260/–<br>பிரிவு 37(2), 25(d), 27(c) த.நீ.க.ச–ன் படி ரூ.5,180/– |

தாவா சொத்துக்களை நலம் தீது கலந்து அளந்து 5 சம பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தினை வாதிக்கு ஒதுக்கி தனி சுவாதினம் செய்து தக்க ஆவணங்கள் செய்து கொடுக்க முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், அவ்வாறு பிரதிவாதிகள் வாதிக்கு பாகம் பிரித்துக் கொடுக்காதபட்சத்தில் இந்நீதிமன்றம் நீதிமன்ற ஆணையரை நியமித்து பாகம் பிரித்து வாதிக்கு கொடுக்க இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், தாவா சொத்து பொறுத்து 1–ம் பிரதிவாதி 5, 6 பிரதிவாதிகளுக்கு கடந்த 07.04.2014–ம் தேதியில் தாவா சொத்தில் விவசாய வண்டிவழி கிரையப்பத்திரம் ஆவண எண். 1231/2014 என பதிவு செய்து கொடுத்துள்ளது செல்லாது மற்றும் இல்லா நிலையது (Declared as Null and void) என அறிவிக்க வேண்டியும், தாவா சொத்து பொருத்து முறையான பாகம் ஏற்படும் வரையில் பிரதிவாதிகள் யாதொரு ஆவண மாற்றமும் வில்லங்க பாராதீனமும் செய்ய கூடாது என நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க வேண்டியும், தாவா செலவுத் தொகையினை பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு கிடைக்க வேண்டியும் இவ்வழக்கு தாக்கல்.

இவ்வழக்கு என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. சசிக்குமார் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்து ஆஜரின்மையால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், 5, 6–ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த

வழக்கறிஞர் திரு. N.K. முருகன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாத உரைகளை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்பாணை

| | |
|---|---|
| 1. | இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. |
| 2. | வழக்கு சொத்தில் வாதிக்கு 1/5–ல் ஒரு பாகம் கிடைக்கக் கூடியது என்று முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது. |
| 3. | தாவா சொத்து பொறுத்து 1–ம் பிரதிவாதி 5, 6 பிரதிவாதிகளுக்கு கடந்த 07.04.2014–ம் தேதியில் தாவா சொத்தில் விவசாய வண்டிவழி கிரையப்பத்திரம் ஆவண எண். 1231/2014 என பதிவு செய்து கொடுத்துள்ளது செல்லாது (Declared as Null and void) என உத்தரவிடப்படுகிறது. |
| 4. | தாவா சொத்து பொருத்து முறையான பாகம் ஏற்படும் வரையில் பிரதிவாதிகள் யாதொரு ஆவண மாற்றமும் வில்லங்க பாராதீனமும் செய்ய கூடாது என நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது. |
| 5. | உறவுமுறைகளைக் கருத்தில் கொண்டு அவரவர்கள் செலவுத் தொகைகளை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் தீர்ப்பளித்து உத்தரவிடப்படுகிறது. |

## செலவுத் தொகைப் பட்டியல் விவரம்

| வாதி தரப்பு செலவுத் தொகை பட்டியல் விவரம் | வாதி தரப்பில் ரூ. | பிரதிவாதிகள் தரப்பு செலவுத் தொகை பட்டியல் விவரம் |
|---|---|---|
| நீதிமன்றக் கட்டணம் | 5,180.00 | தாக்கல் இல்லை |

| | | |
|---|---|---|
| வழக்கறிஞர் கட்டணம் | 5,000.00 | |
| வக்காலத்து ஸ்டாம்ப் | 10.00 | |
| பிராசஸ் கட்டணம் | 05.00 | |
| மொத்தம் | 10,195.00 | |

## சொத்து விவரம்

1. கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், ஊத்தங்கரை சார்பதிவகத்திற்கு உட்பட்ட ஓபகலவலசை கிராம பட்டா எண். 247 சர்வே எண். 27/2A2D, புஞ்சை எக்டர் 1.44. முழுவதும் தீர்வை ரூ.3.57

மதிப்பு ரூ.26,46,000/-

மேற்படி நிலத்தில் உள்ள RCC தார்சு வீடு, மின் இணைப்பு எண். 967

மதிப்பு ரூ.5,00,000/-

ஆழ்துளை கிணறு ஒன்று மதிப்பு ரூ.1,00,000/-

பலன்தரும் தென்னை மரங்கள் 50 (50x1000) மதிப்பு ரூ.50,000/-

2. மேற்படி கிராம சர்வே எண். 27/2A2B புஞ்சை விஸ்த்தீர்ணம் 0.10.00 தீர்வை ரூ.0.25 நிலம் மதிப்பு ரூ.1,85,300/-

கிணறு 5HP மின் மோட்டார் பம்புசெட், மின் இணைப்பு எண். 188 உட்பட

மதிப்பு ரூ.1,00,000/-

தாவா சொத்தின் மொத்த மதிப்பு ரூ.35,81,300/-

வாதிக்குரிய 1/5 பங்கு மதிப்பு ரூ.7,16,260/-

இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07-ஆம் நாள் செவ்வாய்கிழமை, என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge,
Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.